# சிருஷ்டிப்பில் படிப்படியாக பார்க்கலாம்- நிகழ்ச்சி 4

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில், அறிவியலின் காரணமாக தங்களுடைய கிறிஸ்தவ விசுவாசத்தை கைவிட்டவர்களின் கேள்விகளுக்கு இன்று பதிலளிக்க இருக்கிறோம். ஏதோவொரு கட்டத்தில் நீங்கள் இன்றைய நவீன அறிவியலாவது சிருஷ்டிப்பை பற்றிய வேத பதிவிகளுடன் ஒப்பிட இயலாதென்று நினைக்கிறீர்கள். ஆனால் இந்த தொடரில் சமீபத்திய அறிவியல் ஆய்வுகள் உங்களை விசுவாசத்திற்கு நேராக நடத்துவதற்கான ஆதாரங்களை பார்க்க இருக்கிறோம். அதோடு, மற்ற கேள்விகளுக்கும் பதிலளிக்க இருக்கிறோம், இயற்கையின் சாதனைகள் வேதத்தின் பதிப்பில் இருக்கிறது என்ற எதிர்பார்ப்புடன் இருக்க வேண்டியது அவசியமா?

டாக்டர். வால்டர் கெய்சர்: எதிர்பார்ப்பு அவசியம் தான், ஏனென்றால் காரணகர்த்தா ஒருவர்தானே. அதாவது, ஒரு குறிப்பிட்ட கட்டிட கலைஞரால் கட்டப்பட்ட ஒரு கட்டிடத்தையும் அவர் கட்டிய வேறொரு கட்டிடத்தையும் பார்க்கும்போது, நீங்கள், இது பிரான்க் லாயிட் ரைட் கட்டிடம் என்பீர்கள்." இந்த பிரபஞ்சத்தை பார்க்கும் போது, அது தேவனால் உண்டாக்கப்பட்டது. அது எல்லாவற்றிலும்

இருப்பது, “மேட் இன் USA அல்ல ஆனால், “ஜீவனுள்ள தேவனால் உண்டானது என்றிருக்கிறது.” நீங்க வசனத்தை பார்த்தாலும், அதுவும் தேவனிடத்தில் இருந்து வந்ததுதான். இதன், காரணகர்த்தா ஒருவரே. இரண்டையும் உண்டாக்கியது ஒருவரே. இதன் வியாக்கியானங்கள் மாறுபடலாம், ஆனால் ஆதாரங்கள் மாறாது, மூல குறிப்புகள் மாறாதவைகள். அதே தேவனிடத்திலிருந்து தான் ஆதி தகவல்கள் வருகிறது. இல்லாவிட்டால் சிருஷ்டிப்பின் உபதேசத்தை நாம் தூர எரிந்திருப்போம். அப்படியில்லாவிட்டால் நாம் தேவ ஆவியினால் அருளப்பட்ட, தேவ வார்த்தையை புறக்கநித்திருப்போம். எதையும் நம்மால் புறக்கணித்திட முடியாது. அவை இரண்டும் ஜீவனுள்ள தேவனிடமிருந்து வருகிறது.

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு எனது விருந்தினர் வானியலாளரான டாக்டர். ஹக் ராஸ் டொரான்டோ பல்கலைகழகத்தில் வானியலில் பிஹெச்டி பெற்றவர், கேல் டேக்கில் விண்மீன் திரள் ஆராய்ச்சியில் டாக்டர் பட்டம் பெற்றவர். அவர் பல புத்தகங்களையும் எழுதியிருக்கிறார், அவருடைய சமீபத்திய புத்தகம், நேவிகேடிங் ஜெனிசிஸ். அதோடு நாம் எபிரேய பண்டிதரான டாக்டர். வால்டர் கேயசருடைய வார்த்தைகளையும் கேட்க இருக்கிறோம், இவர் உலகிலேயே பழைய ஏற்பாடு மற்றும் எபிரேய மொழியில் அதிக அறிவாற்றல் உடைய நபராக பலரால் கருதப்படுபவர். எங்களோடு இணைந்து இந்த நிகழ்ச்சியில் எப்படி சிருஷ்டிப்பின் பதிவை

கொண்டுள்ள  ஆதியாகமம் 1 மற்றும் 2 நவீன அறிவியல் கண்டுபிடுப்புகளுடன் ஒத்துப்போகிறது என்பதை கேட்டு அறிந்துகொள்ளுங்கள் இது ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சி

*****

டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்: நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இன்றைக்கு உங்களுக்காக விசேஷமான ஒன்றை வைத்திருக்கிறோம். என்னுடைய விருந்தினர் வானியலாளரும் வானியர்பியலாளருமான Dr. ஹக் ராஸ். இப்போதும் ஒரு கேள்வியுடன் துவங்க விரும்புகிறேன், கேள்வி இதுதான்: விஞ்ஞானத்திற்கும் வேதத்திற்கும் ஒப்புமை இருக்கிறது என்ற எதிர்ப்பார்ப்பு நமக்கு இருக்க வேண்டுமா? நீங்க என்ன நினைக்கிறீங்க, முதலாவதாக, வேதம் இந்த கேள்விக்கு என்ன பதில் கொடுக்கிறது? அதோடுகூட, ஹக்கை போன்ற வானியலாளர்களும் வானியர்பியலாளர்களும், என்ன எதிர்ப்பார்க்கிறார்கள்? அவருக்கு இதுபற்றி என்ன தெரியும்? இன்றைக்கு இந்த சுவாரஸ்யமான தலைப்பை உலகத்தில் சிறந்த பிரசித்திபெற்ற எபிரேய பண்டிதருடைய வீடியோவுடன் ஆரம்பித்திடலாம், இதோ Dr. வால்டர் கெய்சர். Dr. வால்டர் கேயசரும் Dr.ஹக்கும் சேர்ந்து என்னுடன் சில நிகழ்சிகளில் பங்குபெற்றிருக்கின்றனர். சில விவாதமேடைகளிலும் இருந்திருக்கிறார்கள். இந்த கேள்விதான் திரும்ப திரும்ப கேட்கப்பட்ட

ஒன்றாகும், அதினால் நான் அவரிடம் கேள்விகேட்க அவர் அளித்த பதிலை இப்போது பார்த்திடலாம். இது சிறியதுதான், எனவே மிகவும் கவனமாக கேளுங்கள். இதை பார்க்கலாம்.

**"அறிவியல் மற்றும் பைபிளின் பெரும் விவாதம்"**

**ஆன்கர்பெர்க்:** உங்க இரண்டு பேருக்கும் ஒரு கேள்வி: கேள்வி என்னவென்றால் வேதத்தின் ஒரு பகுதி, சரியா, விஞ்ஞானம் மறுபக்கம், இவை இரண்டிற்கும் ஒப்புமை இருக்கிறது என்பதை பார்க்க முயற்ச்சிப்பது தவறா? இரண்டையும் நாம் ஒப்புமை படுத்திடலாமா? வால்டர்?

**கெய்சர்:** நிச்சயமா பார்க்கலாம், ஏனென்றால் ஆக்கியோன் ஒருவர் தானே. அதாவது, ஒரு கட்டிடகலை நிபுணரால் கட்டப்பட்ட ஒரு கட்டிடத்தையும் அதே நபரால் கட்டப்பட்ட வேறொரு கட்டிடத்தையும் பார்க்கும்போது, “இது ப்ரேன்க் லாயிட் ரைட் கட்டிடம் என்போம். அதேபோல் இந்த பிரபஞ்சத்தை பார்க்கும்போது, அது தேவனால் கட்டப்பட்டிருக்கிறது. இவை அனைத்தின்மேலும், USA தயாரிப்பு என்றில்லை, ஆனால், ஜீவனுள்ள தேவனால் உண்டாக்கப்பட்டது.” நீங்கள் வசனங்களை பார்க்கும்போது, அதுவும் தேவனிடத்திலிருந்து வந்ததுதான். இப்ப, இதனுடைய ஆக்கியோன் ஒருவர்தான். உரைபெயர்ப்பாளர்கள் இரண்டையும் பார்க்கிறார்கள்.

மொளிபேயர்ப்பலர்களுக்குள் வேற்றுமை இருக்கலாம், ஆனால் ஆதாரங்களிலும் - அடிப்படியான காரியத்திலும் வேற்றுமை இருக்காது. இவற்றின் மூலக்கூறு தேவனிடமிருந்து தான் துவங்குகிறது. அப்படியில்லாவிட்டால், சிருஷ்டிப்பின் உபதேசத்தை தூக்கிஎரிய வேண்டும். அப்படியில்லைன்னா, ஆவியானவரால் அருளப்பட்ட மாறாத, தேவ வார்த்தையை களைந்திட வேண்டியிருக்கும். இரண்டையும் புறக்கணிக்க முடியாது. அவை இரண்டும் ஜீவனுள்ள தேவநிடமிருந்தே உண்டாயிருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** ஹாக், இந்த காரியங்களை குறித்து வால்டர் சொன்னவற்றை கேட்டு எனக்கு மகிச்சியாக இருக்கிறது. உங்களிடம் கேட்கிறேன் ஒரு வானியலாளராக ஆக வானியர்பியலாளராக நீங்கள், இதை ஒப்புக்கொள்கிறீர்களா?

டாக்டர். ஹக் ராஸ்:...நிச்சயமா, அதாவது, தேவனே இயற்கையின் புத்தகத்தை கொடுத்தவர், அவரே நமக்கு இந்த வேத வசனங்களையும் கொடுத்திருக்கிறார். பெல்ஜிக் அறிக்கையை பார்க்கும்போது, தேவன் தம்மை வெளிப்படுத்தும்படி இந்த 2 புத்தகங்களையும் கொடுத்திருப்பதை அறிகிறோம். வால்ட் சொல்வதை நான் ஒப்புக்கொள்கிறேன், ஆமா, விஞ்ஞானம் என்பது இயற்கையை விளக்க மனிதன் மேற்கொண்ட முயற்சி, இறையியல் என்பது வசனத்தை விளக்க மனிதன் மேற்கொண்ட முயற்சி. மனிதர்களுடைய

மொழிபெயர்ப்புகள் என்பதால் அதில் வேறுபாடுகள் இருக்கும். ஆனால் இயற்கைக்கும் இந்த வார்த்தைகளுக்கும் இடையில் எந்த வேறுபாடுகளும் கிடையாது, ஏனென்றால் இவை இரண்டும் ஒரே தேவனிடமிருந்து வந்திருக்கிறது. நம்முடைய விஞ்ஞானமும் இறையியலும் எந்த இடத்தில் மாற்றுக்கருத்து தெரிவிக்கிறது என்பதை கவனித்தால், இதுவரை நம்முடைய பதிப்புகளில்  இல்லாத சில உண்மைகளை நாம் கண்டறிய முடியும்.

**ஆன்கர்பெர்க்:** நாம், கடந்த சில நிகழ்ச்சிகளில், இவை இரண்டிற்கும் ஒப்புமை இருப்பதை எடுத்துரைக்க முயன்றோம், அதாவது, உண்மையில், ஆதியாகமத்தின் முதல் அதிகாரம் பலதரப்பட்ட கருத்துக்களை யோசனைகளை உட்புகுத்திய எல்ல தலைமுறையின் வானியலாளர்கள் வானியர்பியலாளர்களுக்கு உண்மையை எளிய முறையில் எடுத்துரைக்கிறது. அதோடு, ஒரு காரியம் பலதரப்பட்ட இடங்களிலுள்ள இறைநம்பிக்கையற்ற மக்களிடம், எழும்புகிறது, வேதத்தின்படி அந்த நான்காம் நாளில் அப்படி என்ன நடந்தது என்கின்றனர்:

“பின்பு தேவன் பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாககடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குரிக்கிரதர்க்காகவும் இருக்கக்கடவது  என்றார்.

அவைகள் பூமியின்மேல் பிரகாசிக்கும் படிக்கு வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்களாக இருக்ககடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. தேவன் பகலை ஆளப் பெரிய சுடரும் இரவை ஆளாச் சிறிய சுடரும் ஆகிய இரண்டு மகத்தான சுடர்களையும் நட்சத்திரங்களையும் உண்டாக்கினார். அவைகள் பூமியின்மேல் பிரகாசிக்கவும், பகலையும் இரவையும் ஆளவும், வெளிச்சத்துக்கும் இருளுக்கும் வித்தியாசம் உண்டாக்கவும் தேவன் அவைகளை வானம் என்கிற ஆகாய விரிவிலே வைத்தார். தேவன் அது நல்லது என்று கண்டார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி நாலாம் நாள் ஆயிற்று." இப்ப, விஞ்ஞான ரீதியில் இந்த பிரபஞ்சத்தில் பூமியை சுற்றிலும் நட்சத்திரங்கள் சூரியன் மற்றும் சந்திரனை வைக்க நான்கு அல்லது ஐந்து நாட்கள் ஆனது என்று சொன்னால் அது பெரிய பிரச்சனையில் கொண்டு வந்து விடும். இதற்க்கு வப்படி விளக்கமளிப்பீர்கள்?

**ராஸ்:** வெல், ஜான், வேதத்தை தேவனுடைய வார்த்தை அல்ல என்று கூறும் அவனம்பிக்கையுள்ளவர்கள் பெரும்பாலும் சுட்டிக்காட்டும் பகுதியை தான் நீங்கள் சொல்லுகிறீர்கள். இது அறிவியல் ரீதியாக முட்டாள்தனமானது என்கின்றனர். செடிகள் எல்லாம் தோன்றிய பிறகு எப்படி சூரியன் உண்டாகியிருக்க முடியும்? சூரியனுடைய ஒளியும் வெப்பமும் இல்லாமல் எந்த செடிகளும் உயிர்வாழ முடியாது. சூரியனுடைய ஈர்ப்புவிசை இல்லாமல் பூமியானது நிலாக இருப்பது சாத்தியமற்ற காரியம். அவர்களின் கருத்து வேதாகமத்தின் முதல்

அதிகாரத்திலேயே பிழை இருக்கிறபடியால், அதிலிருப்பவற்றை எப்படி நம்புவது?

ஆனால் காலிளியோ கூறுனார் வேதத்தின் விளக்கவுரையில் நீங்கள் செய்யக்கூடிய பெரிய தவறு என்னவென்றால் தவறான கண்ணோட்டத்தில் புரிந்துகொள்வதுதான். அப்படி பார்த்தால் ஆதியாகமம் தெள்ளத்தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆதியாகமம் 1:1, பிரபஞ்சத்தை குறித்து கூறுகிறது, ஆனால் ஆதியாகமம் 1:2 அது பிரபஞ்சம் என்ற பரந்த இடத்தை விட்டு அகன்று பூமியை குறித்து கூறுகிறது. எனவே அந்த கண்ணோட்டத்தில் இருந்து தான் அந்த ஆறு நாட்களை நாம் புரிந்துகொள்ள வேண்டும். என்னவே இப்போது தேவன் பூமியின் பரப்பிலிருந்து மேகங்களை நோக்கிபார்க்கிறார், ஒளி ஊடுருவ முடியாதபடி வளிமண்டலம் சூழ்ந்திருந்ததால் ஆறு நாட்களுக்கு முன்புவரை ஆழத்தின்மேல் இருள் மூடியிருந்தது. யோபு 37 - 39 ஆறு நாட்களை குறித்து கூறுகிறது. தேவன் சமுத்திரத்தை மேகங்களால் உடுத்தியிருந்ததினால் இருள்ளக இருந்ததென்று தெளிவாக சொல்லப்படுகிறது.

சிருஷ்டிப்பின் முதல் நாள், தேவன் ஒளி ஊடுருவ முடியாத வளிமண்டலத்தை ஒலிகசியும் நிலையாக மாற்றினார். சிருஷ்டிப்பின் நாலாம் நாளை தேவன் ஒலிகசியும் நிலையிலிருந்த வளிமண்டலத்தை தேவன் மாற்றினார், நிரந்தரமாக மாற்றினார், அந்த மேகங்கள் விலகினது, பூமியில் இருந்த யாவும் முதன் முறையாக சூரியனை

பார்த்தன, ஆறு நாட்களுக்கு முன்பு தேவன் உண்டாக்கின சந்திரனை நட்சத்திரங்களை வானத்தில் கண்டன. எனவே ஆதியாகமம் 1 போதிப்பதற்கும் விஞ்ஞான பதிப்புகளில் இருப்பதற்கும் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை என்பதுதான் உண்மை.

**ஆன்கர்பெர்க்:** இதெல்லாம், ஆதியாகமத்தில் இருக்கிறது என்பது எனக்கு வியப்பாக இருக்கிறது, இருந்தாலும் உண்மை என்னவென்று பல கிறிஸ்தவர்களும் மற்ற ஜனங்களும் அறியாமல் இருக்கிறார்களே. நீங்க ஒரு கருத்தரங்கிற்கு அழைக்கப்பட்டிருந்தீர்கள் அதில் 700 விரிவுரையாளர்கள், இல்ல ஆதியாகமம் 1ம் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கும் அவனம்பிக்கையுடைய 700 பேர், மத்தியில் நீங்க பேசும்படி கேட்டுக்கொண்டனர். நீங்க இடைவேளையின் போது சொல்லிக்கொண்டிருந்த விஷயம், தேவன் இந்த பகுதியில் என்ன சொல்கிறார் என்பதை புரிந்து கொன்றவர் சொன்ன கருத்தை சொல்லீட்டு இருந்தீங்க. அப்படி பட்ட கருத்தரங்குகளில் என்ன நடக்கும்?

**ராஸ்:** வெல், பார்வையாலர்களுடன் நஅந் பேசும்போது என்ன நடக்கும், அவர்கள், சுமார் 700 நாத்திகர்களாக, இருந்தால், “இதுவரை இந்த ஆதாரங்களை நாங்கள் கேட்டதே இல்லை. ஆதியாகமத்திற்கு இப்படி ஒரு விளக்கம் இருப்பதை நாங்கள் கேள்விப்படவேயில்லை என்றிடுவர்.” நான்  கொண்டது என்னவென்றால் கிருஸ்தவர்கள்

தங்கள் விசுவாசத்திற்கான ஆதாரத்தை எடுத்தோ சொல்லும்படி பயிற்றுவிக்கப்படவில்லை. பல சமயங்களில் அது தேவனுக்கு விரோதமான வாக்குவாதமாக இருப்பது என்பது உண்மையல்ல. நம்முடைய கிறிஸ்தவ விசுவாசத்தை வெளிப்படுத்தும் முறைக்கு விரோதமாகத்தான் நாத்திகர்கள் எளிமையான யுக்கிதிகளை கையாண்டு வாதிக்கின்றனர். நான் ஒன்று சொல்கிறேன், அவர்களுடைய பிரதியுத்திரம் அபாரமாக இருந்தது, குறிப்பாக கால் டேக்கில் நடந்த நிகழ்ச்சி. எல்லாம் முடிந்த பிறகு என்னிடம் வந்து சொன்னாங்க, “இந்த மாதிரியான பதில்களை இதுவரை நாங்கள் கேட்டதேயில்லை. இதற்க்கு முன்பு விவாதமேடையில் இப்படி பார்த்ததே கிடையாது, பல காரியங்களை யோசிக்க வைத்தீர்கள் என்றனர்.” பொதுவாக பலமுறை கேட்ட வார்த்தைகள், “இன்னி நாத்திகத்தில் எனக்கு எந்த பாதுகாப்பும் இல்லை.”

**ஆன்கர்பெர்க்:** அதாவது, ஹக், நீங்க கலந்து கொண்ட விவாதங்களையும் சில இடங்களில் நீங்க கடினமான சூழலையும் சந்தித்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன், கடினமான நிலை என்றால் ஒட்டுமொத்த கூட்டமும் உங்களுடைய கண்ணோட்டத்திற்கு விரோதமாக எதிர்த்து நிறுக்கும் நிலை. ஒருமுறை நீங்க பேசிக்கொண்டிருந்ததை பார்த்தேன், அங்கே இன்னும் 3 விரிவுரையாளர்களும் நீங்களும் இருந்தீர்கள். நீங்க முதல்ல ஆரம்பித்து மெதுவா ஆணித்தரமா, மென்மையாக, ஆனா உறுதியாக,

அறிவியல் ஆதாரங்களை முன்வைதீங்க, அவங்களும் தங்களுடையதை எடுத்து சொன்னாங்க, அப்பறம் அவர்கள் உங்களுடைய கருத்தையும் ஒருவருக்கொருவர் சொன்னதையும் ஏற்றுக்கொள்ள வில்லை. நேயர்களுடைய கேள்வி பதிலுக்கான நேரம் வந்தபோது, நேயர்களிடம் இருந்து தொண்ணூறு சதவிகித கேள்விகள் உங்களுக்கு தான் வந்தது. அவர்கள் உங்களோடு தான் தொடர்ந்து பேச நினைத்தனர். இந்த கருத்தரங்குகளில் முக்கியமாக கேட்கப்படும் கேள்வி பதில்கள் எப்படிப்பட்டவை?

**ராஸ்:** வெல், பொதுவாக அவை ரோமர் 5:12ன் தவறான புரிண்டுகொல்லுதலில் இருந்து துவங்கிடும் ஆதாமுடைய பாவத்தினாலே மரணம் எல்லாருக்கும் வந்தது. ஆனால் அந்து முழு வசனத்தையும் வாசித்தால் அதில், "எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்தது என்கிறது." பாவத்தை அனுபவிக்கும் ஜீவராசிகள் நாம் மட்டுமே. நாயும் பூனையும் பாவம் செய்யாது. மாடு பாவம் செய்வதில்லை. கரப்பான்பூச்சி பாவம் செய்யாது. மனிதர்கள் மட்டும்தான். தில் சொல்லப்படுகிறது, "மரணம் எல்லாருக்கும் வந்தது." எல்லா ஜீவன்களுக்கும் வந்தது என்று சொல்லப்படவில்லை. எனவே ஆதாம் ஏதேன் தோட்டத்தில் பாவம் செய்ததால் முழு மனுக்குலத்திற்கும் மரணத்தை கொண்டுவந்தது,சரீர மரணம் மற்றும் ஆவிக்குரிய மரணம். இந்த பகுதியில் செடிகளும் மிருகங்களும் இணைக்கப்படவில்லை என்பதை கவனமாக பார்க்க

வேண்டியது அவசியம். அதைப்போலவே, 1 கொரிந்தியர் 15, இதே காரியத்தை சுட்டிகான்பிக்கிறது, இது மனிதர்களை தான் குறிக்கிறது என்பது தெளிவாக உள்ளது. எப்படியிருந்தாலும், செடிகளும் மிருகங்களும் மாண்டுபோனாலும் நாம் அதினால் பயனடையதானே செய்கிறோம். அதினால் தான் நமக்கு நிலகரியும், எண்ணெய், இயற்கையான வாயுக்களும் கிடைக்கிறது. அதிலிருந்துதான் சுண்ணாம்பு கல் கிடைக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** இந்த கேள்விக்கும் நீங்க பதில் சொல்லியிருப்பீங்க: இந்த பயோ டிபாஸிட் எல்லாம் எங்கிருந்து வந்தது?

**ராஸ்:** நிச்சயமா. பயோ டிபோசிட்ஸ் ரொம்ப அதிகமானது. அது ஒருவேளை அதிகமாக இல்லாவிட்டால் நிச்சயமா உலகளாவிய அதிநவீன தொழில்நுட்ப செயபாடுகளை செய்துருக்க முடியாது.

**ஆன்கர்பெர்க்:** அதோடு பயோமாஸ் என்ற காரியம், உண்மையில், அதை அடைய பல காலமானது. அதை அடைய உங்களுக்கு எத்தனை காலமானது?

**ராஸ்:** வெல், குறைந்த பட்சம், புவிஓடுகளில் 76 குவட்ரில்லியன் தொங்கல் அளவு பயோ டிபாஸிட் படிந்திருக்கிறது. அப்படி நடக்க, 100 சதவிகித திறன்வாய்ந்த சூரிய ஆற்றல் தேவைப்படும், அப்படியென்றால் இந்த பயோ டிபோசிட்ஸ் சேர்ந்திட பல மில்லியன்கள் ஆண்டுகள் எடுக்கும் என்கிறீர்கள்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், இப்ப இருக்கும் எதிர்ப்பு என்ன? பிரச்ச்சனை என்ன? ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பு மிருகங்கள் மரிக்க வில்லை என்பதற்கு உணர்வுபூர்வமான சம்பந்தம் என்ன?

**ராஸ்:** வெல், பொதுவாக மனிதர்களான நாம் விலங்குகளுடன் உணர்வுபூர்வமாக பினைக்கப்படுகிறோம் என்று நினைக்கிறேன். ஒன்றை கவனிக்க தவறுகிறோம், யோபு சொல்லவது போல, தேவனைக் குறித்தும் நம்மை குறித்தும் நாம் கற்றுக்கொள்ளும் படியாக தான் தேவன் விலங்குகளை நம்மிடம் கொடுத்திருக்கிறார். இந்த விலங்குகள் நம்மோடு பினக்கப்படுபடி உண்டாக்கப்பட்டது போல, நாம் தேவனோடு இணைந்திருக்கும்படி உருவாக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய முரட்டுத்தனம் புண்படுத்தும் நிலை எப்படி இந்த விலங்குகளை நம்மைவிட்டு அகன்று போகும்படி செய்கிறதோ, அதேபோல நம்முடைய பாவங்களும் மீறுதல்களும் தேவன் பக்கமாக போகாமல் அவரை விட்டு நம்மை விலகிசெல்லும்படி செய்கிறது. அவை நமக்கு சந்தோஷத்தை அளிக்க உண்டாக்கப்பட்டது போல, நாமும் தேவனை மகிழ்விக்கும்படி உருவாக்கப்பட்டிருக்கிறோம். தேவன் இந்த ஆத்துமாவையுடைய விலங்குகளுக்கும் நமக்கும் ஒரு பிணைப்பை உண்டாக்கும் உணர்வை கொடுத்திருப்பதற்கு காரணம் என்னவென்றால் அதினால் தேவனோடு நாம் கொண்டிருக்க வேண்டிய உறவை நாம் எளிதில் புரிந்துகொள்வோம் என்பதுதான்.

**ஆன்கர்பெர்க்:** இறையியலில் தான் பிரச்சனை என்று சிலர் கருதுகின்றனர். அதுஎன்னவேன்றால், எப்படி ஆதியாகமம் 1 மற்றும் 2 ன் பதிவுகளில் தேவன் சிருஷ்டிப்பின் நாட்களில் சகல விருட்சங்களையும் பலதரப்பட்ட விலங்குகளையும் எல்லாவற்றையும் சிருஷ்டித்து அது நல்லது என்று கூறிட முடியும். விலங்குகள் மரிப்பதும் மலத்தை கழிப்பதும் சண்டையிடுவதும் நல்லது என்று எப்படி சொல்ல முடியும்?

**ராஸ்:** வெல், ஆதியாகமம் 1ம் வலியுறுத்தும் காரியம் தேவன் சிருஷ்டித்தவை நல்லதாக இருந்தது. ஒவ்வொரு காரியமும் முடிவுபெரும்போது தேவன் அது நல்லது என்று கூறுகிறார். ஆனால் கிறிஸ்தவத்திற்கே உரிய  தனித்தன்மை என்னவென்றால், சிருஷ்டிப்பில் இருக்கும்  2 விதங்கள். தேவன் தமது கரத்தின் கருவியாக வைத்து தீமையையும் உபத்திரவத்தையும் அகற்தரும்படி இந்த பிரபஞ்சத்தை உண்டாக்கினார், அதே சமயத்தில் மனிதனுக்கு தன்னுடைய விருப்பத்தை  வெளிப்படுத்தும்படிக்கு சுயசித்தத்தையும் அவர் கொடுத்திருக்கிறார். இந்த தீமையும் உபத்திரவமும் இங்கிருந்து அகற்றப்பட்ட பிறகு தேவன் மனுக்குலத்தில் விருப்பமுள்ளவர்கள் ஒருபோதும் தீமையும் உபத்திரவமும் இல்லாத புதிய சிருஷ்டிப்பிற்க்குள் பிரவேசிக்க அழைக்கிறார். எனவே இது சிறந்த படைப்புதான், அந்த பரிபூரண படைப்பை நான் அங்கீகரிக்கிறேன்,

தேவன் ஒரேடியா தீமையையும் உபத்திரவத்தையும் அகற்றிவிடுவார். ஆனால் இதுவே சிருஷ்டிப்பின் முடிவு அல்ல.

**ஆன்கர்பெர்க்:** இந்த காரியங்கள் அனைத்தோடும் தொடர்புடைய மற்றொரு கேள்வி இருக்கிறது, ஆதாம் பாவம் செவதற்கு முன்பு விலங்குகள் மரித்திருந்தால், அவை இயேசு இந்த உலகத்தின் பாவத்திற்காக சிலுவையில்  செலுத்திய விலைகிரையத்தோடு தொடர்புடையதாகாதா? இவை பாவநிவாரண செயலை பாதிப்பதாக இருக்குமா? அதை டாக்டர் வால்டர் கேயசரிடம் கேட்டேன், பிரசித்திபெற்ற எபிரேய பண்டிதர்களில் ஒருவர், முந்தைய நிகழ்ச்சிகளில் இந்த கேள்வியை எதிர்கொண்டார், அந்த காட்சியை நீங்களும் பார்க்க விரும்புகிறேன். பாருங்கள்.

<u>"அறிவியல் மற்றும் பைபிளின் பெரும் விவாதம்"</u>

**ஆன்கர்பெர்க்:** இப்போது நாம் பேசிக்கொண்டிருப்பது ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பு உலகில் மரணம் இருந்ததா அல்லது ஆதாமின் பாவம் மனிதனுக்கு மட்டும் மரணத்தை உண்டாக்காமல், மரம் செடிகள் விலங்குகளுக்கும் மரணத்தை கொண்டுவந்ததா? அதைக்குறித்த சுவாரஸ்யமான வற்றை இப்போது பார்த்துக்கொண்டிருகிறோம், அதாவது, சிலர் தத்ரூபமான 24 மணிநேரத்தை பிடித்துகொண்டிருக்கின்றனர், ஒருவேளை நீங்கள் ஆதாம் பாவம்

செய்வதற்கு முன்பு உலகில் மரணம் இருந்தது என்று சொல்வீர்களானால், அது ஏதோவொரு விதத்தில் நிவாரண பலியை பாதிக்கும். மேலும் சிலருடைய, கருத்து, எபிரேயர் 9: 22 கூறுகிறது, “நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும். இரத்தஞ்சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பில்லை.” சரி, ஹக், நீங்க சொல்லுங்க எதனால ஜனங்கள் இந்த காரியத்தை பற்றிக்கொண்டிருக்கிறார்கள் ஒஜவேளை ஆதாமின் வீழ்ச்சிக்கு முன்போ அல்லது, அதற்க்கு பிறகோ விலங்குகள் மரித்திருந்தால், அது இயேசு நம்மை மீட்கும்படியாக செய்தவற்றை பாதிக்கிறது, அல்லது பழைய ஏற்ப்பாட்டில் மோசே கூறியவற்றை பாதிக்கும் என்கின்றனர்?

**ராஸ்:** வெல், அவர்கள் எபிரேயர் 9 மற்றும் 10ம் அதிகாரங்களை மனதில் கொண்டு சொல்கிறார்கள். அதாவது, இரத்தஞ்சிந்துதல் மூலமாக எப்படி மீட்கப்படுகிறோம் என்று அங்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் சிந்தப்படும் எல்லா இரத்தமும் பாவநிவாரணத்தோடு தொடர்புடையது என்கிறார்கள்.

**ஆன்கர்பெர்க்:** யா, ஆனால் கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்படாமல் பாவத்திற்கு மன்னிப்பு உண்டாகாது. சிந்தப்படுகிற அனைத்து இரத்தமும் பாவ மன்னிப்பை உண்டாக்கும் என்று சொல்வதற்கு எந்த அவசியமும் கிடையாது.

**ராஸ்:** அதாவது ஒரு மான் அடர்ந்த புதர்வளியாக செல்ல அதனுடைய மேல்தோலில் காயம் ஏற்ப்பட்டு இரத்தம் வடிந்தால் அது பாவநிவாரணத்தோடு தொடர்புடையதாகாது.

**ஆன்கர்பெர்க்:** இந்த காரியத்தை இப்போது பார்க்கலாம்.

**கெய்சர்:** யா, இது வித்துயாசமான வாக்குவாதம் ஏனென்றால் அதில் சம்பத்தம் இருப்பதாக எனக்கு தோன்றவில்லை. எபிராயர் 9 மற்றும் 10ம் அதிகாரம் சொல்லுகிற காரியம் என்னவென்றால் கிறிஸ்துவே மகா பிரதான ஆசாரியராக அவருடைய சாயலில் உண்டாக்கப்பட்ட ஆவிக்குரிய மற்றும் சரீர பிரகாரமான மரணத்திற்கு பாத்திரமான மக்களுக்காக மரித்தார் என்கிறது. ஆடு மாடுகளின் இரத்தம் பாவத்தை கழுவுவதில்லை என்று அவர் வலியுறுத்துகிறார். அதைதான் எபிரேயர் 10: 2-4 சொல்கிறது. பழைய ஏற்பாடும் இது போதும் என்று ஒருபோதும் சொல்வதில். பழைய ஏற்ப்பாட்டில் தேவனுடைய வார்த்தையின் படிதான் ஒருவனைவிட்டு பாவம் அகற்றப்பட்டது என்று எளிதாக எடுத்துரைக்கிறது.

மேலும் ஒரு ஜீவனுக்காக ஒரு ஜீவன் என்றிருந்தது, ஒரு விலங்கின் ஜீவன் செலுத்தப்பட்டது. அந்த மிருகம் அழியாமையை கொண்டதல்ல. இந்த விலங்குகள், அதை மறுபடியும் மறுபடியுமாக பலி செலுத்த வேண்டியிருந்தது. ஆனால், கிறிஸ்து, வந்தபோது, அவர் ஒரே தரம் வாதிக்கப்பட்டு அவருடைய இரத்தத்தை சிந்தினார். இரத்தம் என்று

சொலும்போது நினைவிற்கு வருவது தானம், ஜீவனை கொடுக்கும் செயல். இந்த இரத்தம் அது சிந்தப்பட்ட இரத்தமாக இருக்கிறது. எனவே இந்த இரத்தம் மரணத்திற்கு, பலி செலுத்துதல், எனவே அவர் கூறும் காரியம் என்னவென்றால் அவருடைய ஜீவனை கொடுத்தால் மட்டுமே, அவருடைய இரத்தம், ஒவ்வொரு மனிதர்களுக்கு பதிலாக, ஒப்புகொடுத்தால் நித்தியஜீவனை பெற்றிடலாம். ஆனால் இதை நீங்கள் இன்னும் விஸ்தாரமாக்கி வைகுதிரைகளுக்கு இரட்சிப்பு வேண்டும், யானைகலுக்காகவும், புளிக்காகவும், இரத்தம் சிந்தப்படவேண்டும் என்று சொல்ல முடியாதென நினைக்கிறேன். இது விதண்டாவாதம் என்றிடுவேன்.

**ஆன்கர்பெர்க்:** வசனம் இல்லை.

**கெய்சர்:** வசனம் இல்லை, இதற்கு எந்த வசன ஆதாரமும் இல்லை. ஒருவேளை மனிதர்களைப்போல மிருகங்களும் இரத்தம் சிந்தப்படுவதால் இரட்சிப்படையும் என்பதாக வசனம் இருந்தால், என்னுடைய எதிர்ப்பை நான் திரும்பபெருகிரேன். அந்த வசனத்தை கண்டறியும் வரை, என்னை அசைக்கமுடியாது.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், ஹக், இதை கவனித்துகொண்டிருக்கிறேன், சிலருக்கு இது ஒரு வேடிக்கை விளையாட்டு போல இருக்கிறது. அவர்கள் வேதத்தோடு அதை பிணைக்கிறார்கள், விலங்குகளை குறித்து அவர்களின் கருத்துகளோடு அதை பினைத்துகொல்கிரார்கள்.

அந்த இரண்டு பகுதிகளையும் தெளிவுபடுத்திடுங்கள். டாக்டர் கெய்சர் கூறியவற்றை பற்றி இன்னும் சிலவற்றை எங்களுக்கு சொல்லுங்கள்.

**ராஸ்:** வெல், கேய்சருடைய வார்த்தைகளோடு சேர்த்து சொல்லவேண்டுமென்றால் ஆதாம் தான் முதல் பாவி என்பது தவறு. சாத்தானே முதில் பாவத்தில் விழுந்தவன். தேவன் இந்த பிரபஞ்சத்தை உருவாக்கும் முன்பே பாவம் இதில் பிரவேசிக்கும் என்பதை அறிந்திருந்தார் என்று சொல்லமுடியும். அதாவது, தீமோத்தேயுவில் சொல்லும்போது ஆதிமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படி நம்மை இரட்சித்தார் என்று இருக்கிறது. இந்த பிரபஞ்சத்தை உண்டாக்கும் முன்பே தமது கிருபையின் அவசியத்தை தேவன் அறிந்திருந்தார். அவர் பாவத்தை எதிர்பார்த்தார், பாவம் வரும்மென்பதை மனிதில் வைத்துதான் இந்த பிரபஞ்சத்தை வடிவமைத்தார். ஆதாம் பாவம் செய்தபோது வேதம் கூறுகிறது, "உன்னிமித்தம் பூமி சபிக்கப்பட்டிருக்கும்," தேவன் பிரபஞ்சத்தின் இயற்பியலை மாற்றவில்லை. இந்த நிலம் முன்பு அளித்த பலனை இன்னி அளித்திடாது என்றே கூறினார், ஏனென்றால் நீ அந்த நிலத்தை வாதிக்கபோகிறாய். நீ மரம் செடிகளையும் மிருகங்களையும் வாதிக்க போகிறாய். அதினால் அது தன பலனை கொடாதிருக்கும்.
வேதாகமத்தில் ஏழு முறை தேவன் அநீதத்தை நிரந்தரமாக அளிக்கும் வரையில் சிருஷ்டிக்கும் பொது ஏற்படுத்தின இயற்பியலின் விதிகளை மாறப்பன்னுவதில்லை என்றிருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பு “நல்லது” என்ற வார்த்தை மிருகங்களின் வலி வேதனையோடு தொடர்புடையதாக இருப்பதில் பிரச்சனை இருப்பது உங்களுக்கு தெரிகிறதா?

**ராஸ்:** வெல், அப்படியில்லை, ஏனென்றால் இந்த சிருஷ்டிப்பை இதிலும் சிறப்பான சிருஷ்டிப்பு மாற்றியமைக்கும் என்று தேவன் வாக்களித்திருக்கிறார். தேவன் நம்மை மறுபடியும் ஏதேன் தோட்டத்திற்கு அலைத்துசெல்வதில்லை. அவரோடு தங்களுடைய நித்தியத்தை செலவிட தீர்மானித்தவர்களுக்காக இதிலும் மேலான பரதீசியை தேவன் தமது மனதில் கொண்டிருக்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** யா. சிருஷ்டிப்பிற்க்கான விஞ்ஞான ஆதாரத்தை தேடி நாடுகிறவர்களுக்கு காத்திருக்கும் நற்செய்தி என்ன?

**ராஸ்:** வெல், நாம் ஏதேன் தோட்டத்தில் இருந்தோம். பாவமில்லாமல் இருந்தோம். நம்முடைய சிருஷ்டிகரை எதிர்க்க தீர்மானித்தோம், ஆனால் தேவன் ஏற்கனவே ஒரு திட்டத்தை வைத்திருந்தார், தேவனுக்கு விரோதமாய் இனி ஒருபோதும் மனுக்குலம் எதிர்க்காதபடி விழுந்துபோன மனுகுலத்தை மீட்க்க விரும்பினார், இருப்பினும் அவர்களுக்கு சுய சித்தம் கொடுக்கப்பட்டிருந்தது. நம்முடைய சுயசித்தத்தை இயற்பியலின் விதிகள் அடைக்கிகொண்டிருப்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இந்த சிருஷ்டிப்பில் நாம் முடிந்த அளவு நம்முடைய நேசத்தை வெளிப்படுத்த வேண்டும் என தேவன்

விரும்புகிறார். ஆனால் முதலில் தீமையை மேல்கொள்ள வேண்டும். அதற்க்கு ஒரே வழி அவருடைய சொந்த குமாரனே இந்த பூமிக்கு வந்து நமது சார்பில் நமக்காக சிலுவையில் பலியாகவேண்டியிருந்தது, நாம் விரும்பினால், நம்முடைய சுயபலத்தால் பெறமுடியாத அந்த பரிபூரணத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

**ஆன்கர்பெர்க்:** நேயர்களே,நீங்கள் இதை கேட்டுக்கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன் மேலும் தேவன் நம்மிடம் சொல்லுகிரவற்றை நீங்கள் சிந்தித்து கொண்டிருப்பீர்கள் என்றும் நம்புகிறேன். விஞ்ஞானத்தின் பதிவுகளிலும் வேதத்திலும் சொல்லப்பட்டிருக்கும் காரியங்களை அறிவதன் மூலம் உங்களுடைய விசுவாசம் இன்னும் பலப்படுத்தப்படும் இவை எப்படி நேர்த்தியாக ஒத்திருக்கிறதென்று யோசித்துபாருங்கள்.

இப்போதும் நம்முடைய நிகழ்ச்சிகளில் நம்முடன் இருந்த ஹகிர்க்கு நன்றி சொல்ல விரும்புகிறேன், உங்களுடைய தாழ்மையும் உங்களுடைய அறிவாற்றலையும் பார்க்கும்போது வியப்பாக இருக்கிறது. நிச்சயமாக சொல்லுகிறேன் நாம் பல காரியங்களை இந்த நாட்களில் கற்றுக்கொண்டிருக்கிறோம். உங்களுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றியை தெரிவிக்கிறோம்.

**ராஸ்:** என்னுடைய சிலாக்கியம்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.